கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 10.12.2024. அ.வ.எண். 435/2015, வா.சா. 1. வேல்விழி, க/பெ.ராஜேந்திரன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) தாவா சொத்தை அளவீடு செய்வதற்கு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்வதற்கு நான் தான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கிழபுறம் தென்வடலாக 30 அடி ரோடு செல்கிறது என்றால் சரிதான். அந்த ரோடு அருகில் இருக்கும் பள்ளிக்கு மட்டும் செல்லக்கூடிய ரோடு ஆகும். எனது வீட்டிற்கு மேல்புறம் 1,2 பிரதிவாதிகளான சுபைதா பீவி வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென்புறம் உள்ள கிழமேல் சந்து வழியாகத்தான் பிரதிவாதிகள் அவர்களது வீட்டிற்கு செல்வார்கள் என்றால் சரிதான். அந்த சந்து எங்களுக்கும் பாத்தியப்பட்டது ஆகும்.

2) நான் இருக்கும் வீடு மற்ற வீடுகள் அனைத்தையும் எனது தகப்பனார் தான் கிரயத்திற்கு பெற்றார் என்றால் சரிதான், யாரிடம் இருந்து மேற்படி வீடுகளை எனது தகப்பனார் வாங்கினார் என்றால் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் இருந்து வாங்கினார். எனது தகப்பனார் மேற்படி சொத்தை வாங்கிய போது அளந்து பார்த்து வாங்கினார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு நான் ஏதேனும் ஆட்சேபணை தெரிவித்தேனா என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை எனது தங்கையை தான் கேட்கவேண்டும். தாவா சொத்தில் நான் தற்போது குடியிருந்து வருகிறேனா என்றால் தற்போது நாங்கள் அங்கு இல்லை அதற்கு முன்பு நான் தான் அங்கு இருந்து வந்தேன் எனது அம்மாவிற்கு உடல்நிலை முடியாததால் வீட்டை

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

பூட்டிவிட்டு எனது தங்கை வீட்டில் இருந்து வருகிறோம், பிரதிவாதிகள் எனது வீட்டிற்கு மேல்புறத்தில் குடியிருந்து வருகிறாரா அல்லது எங்கு உள்ளார் என்றால் அவர் மேற்படி வீட்டை வேறு ஒரு நபருக்கு விற்றுவிட்டார் எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது. வாங்கிய நபர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது அவரது உறவினர்கள் அந்த வீட்டில் இருக்கிறார்கள்.

ஒப்பம்/- (ஆர். சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி